உம்மை உயர்த்தி உயர்த்தி
உள்ளம் மகிழுதய்யா
உம்மை நோக்கிப் பார்த்து
இதயம் மகிழுதய்யா-2

கரம் பிடித்து நடத்துகிறீர்
காலமெல்லாம் சுமக்கின்றீர்-2
நன்றி நன்றி-4

கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
காயமெல்லாம் ஆற்றுகிறீர்
நன்றி நன்றி-4

நல்லவரே வல்லவரே
காண்பவரே காப்பவரே
நன்றி நன்றி-4

இருப்பவரே இருந்தவரே
இனிமேலும் வருபவரே
நன்றி நன்றி-4